بسم الله الرحمن الرحيم نحمده ونصلى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 31

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

19 ஸுல்கஃதா 1439 ஹிஜ்ரி கமரி 2 ஸஹுர் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

2 ஆகஸ்ட் 2018


## அல்லாஹ்வின் கட்டளை

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اَنْفِقُوْا مِمَّا رَزَقْنٰكُمْ مِّنْ قَبْلِ اَنْ يَّاْتِيَ يَوْمٌ لَّا بَيْعٌ فِيْهِ وَلَا خُلَّةٌ وَّلَا شَفَاعَةٌ ؕ وَالْكٰفِرُوْنَ هُمُ الظّٰلِمُوْنَ ○

நம்பிக்கை கொண்டவர்களே! எவ்வித கொடுக்கல் வாங்கலும் நட்பும் பரிந்துரையும் இல்லாத அந்நாள் வருவதற்கு முன்னர் நாம் உங்களுக்கு வழங்கியதிலிருந்து செலவு செய்யுங்கள். நிரகரிப்பவர்கள் (தங்களுக்கே) அநீதியிழைப்பவர்களாவர்.

(அதிகாரம் அல் பக்கரா : 255)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**எவர் திருக்குர்ஆனின் எழுநூறு கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையையாவது மீறுவாரோ அவர் தனது இரட்சிப்பின் வாசலைத் தனது கரங்களால் தன் மீதே அடைத்துக் கொள்கிறார் என்பதனை நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன். உண்மையானதும் முழுமையானதுமான இரட்சிப்புக்குரிய வழிகளை திருக்குர்ஆனே நமக்குத் திறந்து தந்திருக்கிறது. எஞ்சியிருப்பவை அனைத்தும் அதன் நிழல்களாகும். ஆகவே நீங்கள் திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றிப் படியுங்கள். அதனை மிகவும் மேலாக நேசியுங்கள். வேறெதன் மீதும் வைக்காத பற்றை அதனோடு வையுங்கள்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

உங்களிடையே சிலர் ஹதீஸை முற்றிலும் ஒப்புக் கொள்வதில்லை என்று நான் கேள்வியுற்றேன். அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள் என்றால் அது பெரும் தவறாகும். இவ்வாறு செய்யுமாறு நான் உங்களுக்கு ஒருபோதும் போதிக்கவில்லை. மேலும் எனது நம்பிக்கை என்னவெனில் உங்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக இறைவன் மிக முக்கியமான மூன்றை உங்களுக்காக வழங்கியுள்ளான்.

அவற்றில் முதன்மையானது திருக்குர்ஆனேயாகும்.☆ இதில் இறைவனின் ஏகத்துவத்தைப் பற்றியும் அவனது கம்பீரம் மகத்துவத்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. மேலும் இதில் யூத கிறிஸ்தவர்களுக்கிடையில் காணப்பட்ட வேற்றுமைகளுக்கும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனில் ஈசப்னு மர்யம் சிலுவையில் கொல்லப்பட்டார். மேலும் அவர் சாபத்திற்கு ஆளானார். ஏனைய நபிமார்களைப் போல் அவருக்கு ஆன்மீக உயர்வு (ரஃபஅ) ஏற்படவில்லை என்ற மாறுபாடானதும் தவறானதுமான கருத்துகளுக்கு நல்ல தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஏக இறைவனைத் தவிர நீங்கள் எப்பொருளையும் அதாவது – மனிதன், மிருகம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் உலகபொருட்கள், உங்களது மன இச்சைகள் ஆகியவற்றை வணங்குவது குர்ஆனில் தடை செய்யப்பட்டிருக்கின்றது. ஆதலால் மிகக் கவனமாய் இருங்கள். இறைவனது போதனைக்கும் குர்ஆனின் நேர்வழிக்கும் மாறாக ஓர் அடி கூட எடுத்து வைக்க முற்படாதீர்கள்.

எவர் திருக்குர்ஆனின் எழுநூறு கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையையாவது மீறுவாரோ அவர் தனது இரட்சிப்பின் வாசலைத் தனது கரங்களால் தன் மீதே அடைத்துக் கொள்கிறார் என்பதனை நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன். உண்மையானதும் முழுமையானதுமான இரட்சிப்புக்குரிய வழிகளை திருக்குர்ஆனே நமக்குத் திறந்து தந்திருக்கிறது. எஞ்சியிருப்பவை அனைத்தும் அதன் நிழல்களாகும். ஆகவே நீங்கள் திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றிப் படியுங்கள். அதனை மிகவும் மேலாக நேசியுங்கள். வேறெதனோடும் வைக்காத பற்றை அதனோடு வையுங்கள். ஏனெனில் இறைவன் என்னை நோக்கி اَلْخَيْرُ كُلُّهٗ فِي الْقُرْاٰنِ என்று கூறியுள்ளான். அதாவது எல்லாவிதமான நலன்களும் திருக்குர்ஆனில் உள்ளன.

உண்மையும் இதுவேயாகும். திருக்குர்ஆனைக் காட்டிலும் மற்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் மக்களைக் குறித்து நான் பரிதாபம் கொள்கின்றேன். உங்களின் எல்லா விதமான வெற்றிக்கும் இரட்சிப்பிற்கும் ஆன ஊற்றின் உறைவிடம் திருக்குர்ஆனில் உள்ளது. திருக்குர்ஆனில் காணப்படாத உங்களது எந்த மார்க்கத் தேவையுமில்லை.

இறுதி நாளில் உங்களது நம்பிக்கை பொய்யானதா? உண்மையானதா? எனப் பிரித்துக் காட்டக்கூடிய நூல் திருக்குர்ஆனேயாகும்.

குர்ஆன் மூலமாக அல்லாமல் உங்களுக்கு நேர்வழி காட்டக்கூடிய நூல் வானத்தின் கீழ் வேறொன்றும் இல்லை. திருக்குர்ஆனை உங்களுக்கு அருளியிருப்பதன் மூலம் மாபெரும் அருட்கொடையை இறைவன் உங்களுக்காக அளித்திருக்கின்றான்.

உங்களுக்காக அருளப்பட்டிருக்கின்ற இவ்வேதம் கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் நிச்சயமாக அவர்கள் வழிதவறியிருக்க மாட்டார்கள். உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடையும், நேர்வழியும் தவ்ராத்திற்கு பதிலாக யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களில் சில பிரிவினர் இறுதி நாளை மறுத்திருக்கவே மாட்டார்கள் என்று நான் உண்மையாக கூறுகிறேன்.

எனவே உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடைக்கு மதிப்பளியுங்கள். இது மிகவும் அன்பார்ந்த அருட்கொடையும் கிடைப்பதற்கரிய செல்வமும் ஆகும்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களான ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**மார்க்க அறிவை கற்பது, திருக்குர்ஆனின் ஞானத்தை கற்பது ஆகியவற்றிற்கான ஏற்பாடு தற்போது இருக்கின்றது. அல்லாஹ் இக்காலத்தில் M.T.A வின் மூலமாக ஒரு புதிய வழியை நமக்கு திறந்து தந்துள்ளான். நாம் விரும்பினால் இதன் மூலமாக மார்க்க அறிவை கற்றுக் கொள்ள இயலும்**

**திருக்குர்ஆன் தர்ஸ் இதில் வருகின்றது. ஹதீஸின் தர்ஸ் வருகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து தர்ஸ் கொடுக்கப்படுகின்றது. குத்பாக்கள் இருக்கின்றன. இதர சொற்பொழிவுகள் இருக்கின்றன. மாநாடுகள் இருக்கின்றன**

**எனவே இவ்வகையில் நாம் நம்மையும் நமது சந்ததிகளையும் இந்த வழிமுறைகளின்படி இணைத்தால் இது தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த ஒரு வழியாக இருக்கின்றது. மேலும் இது எல்லா விதமான குழப்பங்களிருந்தும் காப்பாற்றக் கூடியதாகவும் இருக்கின்றது. மேலும் மார்க்க அறிவை அதிகப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது. எனவே இதன் பக்கம் ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் M.T.A என்ற வழியை தந்துள்ளான். தம்மைத் தாமே அதில் இணைத்துக் கொள்ள வேண்டும்**

**லாஹூர் சவாபா கார்டனைச் சார்ந்த மதிப்பிற்குரிய காஸி முஹம்மது சல்மான் சாஹிப் அவர்களுடைய மகனான காஸி ஷஃபான் அஹ்மது கான் சாஹிப் அவர்களது ஷஹாதத் தொடர்பான சம்பவம் மற்றும் ஜனாஸா காயிப் தொழுகையையும், மதிப்பிற்குரிய சேட் முஹம்மது கவ்ஸ் சாஹிப் அவர்களது மகளான மதிப்பிற்குரிய அம்மத்துல் ஹய் சாஹிபா அவர்களுடைய சிறப்பம்சங்களையும் எடுத்துக்கூறி ஹுஸூர் அவர்கள் ஜனாஸா ஹாஸிர் தொழுகையை தொழ வைத்தார்கள்**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** **29 ஜூன் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **29 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களைப் பற்றி கூறியிருந்தேன். அவர்களைப் பற்றிய மேலும் சில அறிவிப்புகள் இருந்தன. அவற்றை இன்று நான் எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் மரணிக்கும் நாள் வரை எவர் மீது அன்பு கொண்டிருந்தார்களோ அவரை அல்லாஹ் நரகத்தில் நுழையச் செய்ய மாட்டான் என்று நான் நம்புகின்றேன்.

மக்கள் கூறினார்கள். அதாவது நாங்கள் பார்த்து வந்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்கள் மீது அன்பு கொண்டிருந்தார்கள். உங்களை பணியாளராக நியமித்து வந்தார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்மீது அன்பு கொண்டிருந்தார்களா? அல்லது உள்ளத்தால் என்னுடன் ஒன்றியிருந்தார்களா? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால், ஒருவர் மீது அன்னார் அன்பு கொண்டிருந்ததை நாங்கள் பார்த்திருக்கின்றோம் என்று கூறினார்கள்.

அதற்கு மக்கள், அந்த நபர் யார்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் (ரலி) அவர்கள், அது அம்மார் பின் யாஸிர் (ரலி) ஆவார்கள் என்று கூறினார்கள். இவர் எப்படிப்பட்டவர் என்றால் இந்த நபரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதும் நேசித்தார்கள்; மக்கள் இந்த விஷயத்தை கேட்டு விட்டு, நீங்கள் தானே சிஃப்பீன் போரில் அன்னாரை ஷஹீதாக்கினீர்கள் என்று கூறினர். அந்த நேரத்தில் ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் அவர்கள் முஆவிய்யாவிற்கு சாதகமாக இருந்து வந்தார். அவர்கள், இறைவன் மீது ஆணையாக! நாங்கள் தான் அவரை கொன்றோம் என்று கூறினார்கள்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

**“நான் இரண்டு நபரைப் பற்றி சாட்சி கூறுகின்றேன். அவர்கள் இருவர் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் மரணிக்கும் நாள் வரை அன்பு செலுத்தினார்கள். ஒருவர் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) ஆவார். மற்றொருவர் அம்மார் பின் யாஸிர் (ரலி) ஆவார்.”**

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 199, அம்மார் பின் யாஸிர் (ரலி), 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்பில் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அபூபக்ர் பின் முஹம்மது பின் அம்ர் பின் ஹஸ்ம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்.

ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட போது அம்ர் பின் ஹஸ்ம் அவர்கள் அம்ர் பின் ஆஸ் அவர்களிடத்தில் வந்து, ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி விட்டார்கள். அவர்களை கிளர்ச்சியாளர்களின் கூட்டம்தான் ஷஹீதாக்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன் என்று கூறினார்கள். இதனால் ஹஸ்ரத் அம்ர் அவர்கள் பதற்றமடைந்து முஆவிய்யாவிடத்தில் சென்றார்கள்.

முஆவிய்யா எல்லாம் நன்றாகத்தானே இருக்கின்றது என்று கேட்டார். அதற்கு அவர்கள் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களை

ஷஹீதாக்கி விட்டார்கள் என்று கூறினார்கள். அதற்கு முஆவிய்யா, அம்மார் ஷஹீதாக்கப்பட்டு விட்டால் அதற்கென்ன? என்று கேட்டார். அதற்கு அம்ர் அவர்கள், அம்மார் அவர்களை கிளர்ச்சியார்களின் கூட்டம் தான் கொலை செய்யும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன் என்று கூறினார்கள்.

அதற்கு முஆவிய்யா, நாங்களா அவரை கொலை செய்தோம்? ஹஸ்ரத் அலியும், அவருடன் இருப்பவர்களும் தான் அவரை கொலை செய்தனர். அதாவது அவரை எங்களது ஈட்டிகளுக்கு முன்னால் அல்லது வாள்களுக்கு முன்னால் அவர்கள் தான் கொண்டு வந்து விட்டனர் என்று கூறினார்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 474, கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா, ஸிக்ர் மனாகிப் அம்மார் பின் யாஸிர் (ரலி), ஹதீஸ் எண் 5726, 1997 ஆம் ஆண்டு தாருல் ஹர்மைனில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் அவர்களுக்கு ஏற்பட்ட கவலையானது அவர்களிடம் இருந்த நன்மையினாலேயே ஆகும். ஆனால் அமீர் முஆவிய்யா இந்த விஷயத்திற்கு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் சஹாபாக்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதாவதொரு விஷயம் தொடர்பாக அச்சமூட்டிய அல்லது நற்செய்தி வழங்கிய அறிவிப்பு சென்றடைந்தாலோ அல்லது அவர்களே கேள்விப்பட்டாலோ அந்த விஷயம் தொடர்பாக அவர்களுக்கு மிகுந்த கவலை இருந்து வந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்கள் பற்றி கூறினார்கள்:

“அவர்கள் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஈமானில் நிரம்பியவராக இருந்தார்கள்.”

(இமாம் அஹ்மது பின் ஹம்பல் மொழிபெயர்த்துள்ள ஃபஸாயில் சஹாபா (ரலி) என்ற நூலின் பக்கம் 520, நவீது அஹ்மது பஷார் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்ட ஃபஸாயிலி சய்யிதினா அம்மார் பின் யாஸிர் (ரலி), 2016 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் குபாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடத்தில் பக்கத்தில் வாருங்கள். இந்த சபையில் உங்களைத் தவிர வேறு எவரும் அதிக உரிமை படைத்தவர் அல்லர். ஆனால் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களைத் தவிர என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் குபாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இணை வைப்பவர்கள் தமக்கு இழைத்த தமது முதுகிலுள்ள காயத்தின் அடையாளங்களைக் காட்டினார்கள்.

(சுனன் இப்னி மாஜா, கிதாபுஸ் சுன்னா, பாப் ஃபஸாயில் குபாப் (ரலி) ஹதீஸ் எண் 153)

ஹஸ்ரத் உமர் அவர்கள் அவர்களை கண்ணியப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஏனென்றால் இவர்கள் ஆரம்ப காலத்தில் அதிகமான கஷ்டங்களை சந்தித்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் அன்னார் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களைப் பற்றி, அவர்களும் அதிகமான கஷ்டங்கள் சந்தித்தார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அம்மார் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களது ஷஹாதத் தொடர்பாகவும் ஓர் அறிவிப்பு வருகின்றது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்புடன் தொடர்புடையதாகும்.

ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஒரு முறை ஸாதுல் அஷீரா என்ற போரில் கலந்து கொள்வதற்காக நானும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் ஒன்றாக பயணம் சென்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் தமது கூடாரத்தை அமைத்தபோது நாங்கள் பனு முத்லிஜை சார்ந்த சில மக்களை பார்த்தோம். அவர்கள் தமது தோட்டத்திலுள்ள நீரோடைகளில் பணி செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் என்னிடம், வாருங்கள். அங்கு சென்று அவர்கள் எவ்வாறு பணி செய்கின்றார்கள்? என்று பார்ப்போம் என்று கூறினார்கள்.

எனவே நாங்கள் அவர்களுக்கு அருகில் சென்றோம். சிறிது நேரம் வரை நாங்கள் அவர்கள் செய்கின்ற பணியை பார்த்தோம். பிறகு எங்களுக்கு தூக்கம் வந்து விட்டது.

எனவே நானும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் திரும்பி வந்து விட்டோம். பிறகு அந்த தோட்டத்திலுள்ள மண்ணிலேயே படுத்து விட்டோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! எங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே வந்து எழுப்பினார்கள். அன்னார் காலினால் எங்களை அசைத்தார்கள். நாங்கள் மண்ணோடு மண்ணாகி இருந்தோம்.

அந்த நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், அபூ துராபே! (அதாவது அவர்கள் மீது மண் இருந்தது தெரிந்ததனால் அன்னார் அவர்களை அபூ துராப் என்று அழைத்தார்கள்).

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் உங்களுக்கு மக்களிலேயே மிகத் தீய இரண்டு மனிதர்களைப் பற்றி கூறட்டுமா? என்று கேட்டார்கள்.

அதற்கு நாங்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கூறுங்கள் என்று கூறினோம். அதற்கு அன்னார் **அவர்களில் ஒருவர், ஒட்டகத்தின் கால்களை வெட்டிய சமூது சமுதாயத்தைச் சேர்ந்த அந்த வெள்ளை மற்றும் நிவப்பு நிற மனிதர் ஆவார். இன்னொருவர் யார் என்றால், அலியே அவர் உமது தலை மீது தாக்குதல் தொடுத்து உமது தாடியை இரத்தத்தினால் நனைத்து விடுவார்** என்று கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 261 ஹதீஸ் அம்மார் பின் யாஸிர் (ரலி), ஹதீஸ் எண் 18511, 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூ மிஜ்லஸ் அவர்கள் கூறுகிறார்கள். ஒரு முறை ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்கள் மிகவும் சுருக்கமாக தொழ வைத்தார்கள். அவர்களிடத்தில் ஒருவர் அதற்கான காரணத்தை கேட்டார். அதற்கு அம்மார் பின் யாஸிர் அவர்கள், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுததைப் போன்றே தொழுதேன். சிறிதளவும் அதற்கு மாற்றமாக தொழுவில்லை என்று கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 262, ஹதீஸ் அம்மார் பின் யாஸிர் (ரலி), ஹதீஸ் எண் 18514, 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அபூ மிஜ்லஸ் கூறியதாக இன்னொரு இடத்தில் இந்த அறிவிப்பு நமக்கு இவ்வாறு கிடைக்கின்றது.

ஒரு முறை ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்கள் மிகவும் சுருக்கமாக தொழ வைத்தார்கள். மக்களுக்கு இதனால் வியப்பு ஏற்பட்டது. அதற்கு ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்கள், நான் ருகூ

மற்றும் சுஜூதை முழுமை செய்யவில்லையா? என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் ஏனில்லை? என்று கூறினார்கள். ஹஸ்ரத் அம்மார் அவர்கள், நான் இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்ட ஒரு துஆவை செய்தேன் என்று கூறினார்கள்.

அந்த துஆ இதுவாகும்.

اَللّٰهُمَّ بِعِلْمِكَ الْغَيْبَ وَقُدْرَتِكَ عَلَى الْخَلْقِ

أَحْيِنِيْ مَا عَلِمْتَ الْحَيَاةَ خَيْرًا لِي وَتَوَفَّنِيْ إِذَا كَانَتِ الْوَفَاةُ خَيْرًا لِيْ۔

اَسْأَلُكَ خَشْيَتَكَ فِي الْغَيْبِ وَالشَّهَادَةِ وَكَلِمَةَ الْحَقِّ فِي الْغَضَبِ وَالرِّضَا وَالْقَصْدَ

فِي الْفَقْرِ وَالْغِنٰى وَلَذَّةَ النَّظَرِ اِلٰى وَجْهِكَ وَالشَّوْقَ اِلٰى لِقَائِكَ وَاَعُوْذُبِكَ مِنْ ضَرَّاءَ

مَضَرَّةٍ وَمِنْ فِتْنَةٍ مُضِلَّةٍ۔ اَللّٰهُمَّ زَيِّنَّا بِزِيْنَةِ الْاِيْمَانِ وَاجْعَلْنَا هُدَاةً مَهْدِيِّيْنَ

**“அதாவது அல்லாஹ்வே! மறைவானவற்றைப் பற்றிய அறிவு உனக்கே இருக்கின்றது. அனைத்து படைப்பினங்களையும் உனது ஆற்றலே சூழ்ந்துள்ளது. உனது அறிவில் எனது வாழ்க்கை எப்போது வரை எனக்கு சிறந்ததாக இருக்குமோ அப்போது வரை நீ என்னை உயிரோடு வைப்பாயாக. எனது மரணம் எனக்கு சிறந்ததாக இருக்கும் போது நீ எனக்கு மரணத்தை வழங்குவாயாக.**

**அல்லாஹ்வே! நான் மறைவாக இருக்கும் நிலையிலும், வெளிப்படையாக உன் முன்னால் இருக்கும் நிலையிலும் உன் மீதுள்ள அச்சத்தை வேண்டியவனாக இருக்கின்றேன். மேலும் கோபம் மற்றும் திருப்தி ஆகிய நிலைமைகளில் உண்மையை கூறக்கூடிய ஆற்றலை வேண்டுகின்றேன். மேலும் வறுமையிலும், செல்வ செழிப்பிலும் நடுநிலையை மேற்கொள்ளவும், உனது முகத்தை காண்பதினால் ஏற்படும் இன்பதைதையும், மேலும் உன்னை சந்திப்பதற்கான ஆர்வத்தையும் உன்னிடம் வேண்டுகின்றேன். துன்பத்தை விளைவிக்கின்ற விஷயங்கள் மற்றும் வழிகேட்டின் பக்கம் கொண்டு செல்கின்ற குழப்பங்களிலிருந்து உனது அடைக்கலத்தில் வருகின்றேன்.**

**அல்லாஹ்வே! எங்களை ஈமானின் அழகால் எங்களை அலங்கரிப்பாயாக. மேலும் எங்களை நேர்வழி பெறக்கூடிய மக்களுக்கு வழிகாட்டியாக ஆக்குவாயாக.”**

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 262, ஹதீஸ் அம்மார் பின் யாஸிர் (ரலி), ஹதீஸ் எண் 18515, 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதுவும் அறிவிப்பில் வருகின்றது:

ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு ஜுமுஆவிலும் பிரசங்க மேடையில் சூரா யாஸீனை ஓதி வந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 193, அம்மார் பின் யாஸிர் (ரலி), 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரு அஹ்யாயித் துராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

ஹாரிஸ் பின் சுவைது அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு நபர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அம்மார் (ரலி) அவர்களைப் பற்றி குற்றஞ்சாட்டினார். ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்கள் வரை இந்த விஷயம் சென்றடைந்தது. அன்னார் துஆ செய்வதற்காக தனது கைகளை உயர்த்தியவாறு, அல்லாஹ்வே! இந்த நபர் என்மீது பொய்யை இட்டுக்கட்டி கூறியிருந்தால் இந்த நபருக்கு இவ்வுலகில் அபிவிருத்தியை வழங்குவாயாக. மேலும் அவருடைய மறுமையை சூழ்ந்து கொள்வாயாக என்று துஆ செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 194, அம்மார் பின் யாஸிர் (ரலி), 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் அஹ்யாயித் துராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

அபூ நவ்ஃபல் பின் அபீ அக்ரப் அவர்கள் கூறுகின்றார்கள்.

**“ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்கள் மிகவும் அதிகமாக அமைதியை மேற்கொள்பவர்களாக விளங்கினார்கள். மேலும் குறைவாகவே பேசக் கூடியவர்களாக இருந்தார்கள். மேலும் அவர்கள், நான் ஃபித்னாவிலிருந்து அல்லாஹ்வின் அடைக்கலத்தை நாடுகின்றேன். நான் ஃபித்னாவிலிருந்து அல்லாஹ்வின் அடைக்கலத்தை நாடுகின்றேன் என்று கூறி வந்தார்கள்.”**

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 194, அம்மார் பின் யாஸிர் (ரலி), 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் அஹ்யாயித் துராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

கய்ஸமா பின் அபீ சபுரா கூறுகின்றார்கள்:

நான் மதீனா வந்தேன். மேலும் அல்லாஹ்விடம், எனக்கு ஏதாவதொரு நல்ல மனிதரின் நெருக்கத்தை வழங்குவாயாக என்று துஆ செய்தேன். இதன் விளைவாக அல்லாஹ் எனக்கு ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களது நெருக்கத்தை வழங்கினான்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் என்னிடம், நீங்கள் எந்த மக்களைச் சார்ந்தவராவீர்கள்? என்று வினவினார்கள். நான் கூஃபா மண்ணைச் சார்ந்தவனாவேன். அறிவு மற்றும் நன்மையை பெறுவதற்காக இங்கு வந்துள்ளேன் என்று கூறினேன்.

அதற்கு ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், உங்களிடத்தில் துஆக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தண்ணீரையும், அன்னாரது காலணிகளையும் சுமக்கின்ற ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இரகசியத்தைப் பேணக்கூடிய ஹஸ்ரத் ஹுதைஃபா பின் யமான் (ரலி) அவர்களும், அல்லாஹ் ஷய்த்தானிடமிருந்து அடைக்கலம் வழங்கியுள்ளான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நாவின் மூலமாக நற்செய்தி வழங்கப்பட்ட அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களும், மேலும் இரு வேத நூல்களான இன்ஜீல் மற்றும் திருக்குர்ஆனின் ஞானத்தைப் பெற்றிருக்கின்ற ஹஸ்ரத் சல்மான் அவர்களும் உங்களிடம் இல்லையா? என்று கேட்டார்கள்.

(அல்முஸ்தத்ரக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 481, கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா, ஸிக்ர் மனாகிப் அம்மார் பின் யாஸிர் (ரலி), ஹதீஸ் எண் 5746, 1997 ஆம் ஆண்டு தாருல் ஹர்மைனில் அச்சிடப்பட்டது)

மேலும் அன்னார், இந்த மக்கள் எல்லாம் இருக்கும்போது ஏன் இவர்களிடமிருந்து பலன் பெறவில்லை என்று வினவினார்கள்.

முஹம்மது பின் அலி பின் ஹன்ஃபியா அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோயுற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களிடம், ஜிப்ரீல் என் மீது ஓதிய துஆவை கற்றுத் தரவா? என்று கேட்டார்கள். அதற்கு அம்மார் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! கற்றுத் தாருங்கள் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இந்த துஆவை கற்றுக் கொடுத்தார்கள்.

بِسۡمِ اللّٰہِ اَرۡقِیۡکَ وَاللّٰہُ یَشۡفِیۡکَ مِنۡ کُلِّ دَاءٍ یُّؤۡذِیۡکَہ

**“அதாவது நான் அல்லாஹ்வின் பெயரில் ஆரம்பித்தவாறு உன் மீது ஓதி ஊதுகின்றேன். அல்லாஹ் உமக்கு துன்பத்தை தரக்கூடிய ஒவ்வொரு நோயிலிருந்தும் உமக்கு குணமளிப்பானாக. நீங்கள் அதை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் மகிழ்ச்சியடையுங்கள்.”**

(அல்முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைன் தொகுதி 3 பக்கம் 481,482, கிதாப் மஃரிஃபத்துஸ் சஹாபா, ஸிக்ர் மனாகிப் அம்மார் பின் யாஸிர் (ரலி), ஹதீஸ் எண் 5748, 1997 ஆம் ஆண்டு தாருல் ஹர்மைனில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

சுவர்க்கம் ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி), ஹஸ்ரத் சல்மான் (ரலி), ஹஸ்ரத் பிலால் ரலியல்லாஹு தஆலா அன்ஹும் ஆகியோரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

(அல் இஹ்திஆப் தொகுதி 3 பக்கம் 1138, அம்மார் பின் யாஸிர் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தோம். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**“நான் உங்கள் மத்தியில் எவ்வளவு நேரம் இருப்பேன் என்பது எனக்குத் தெரியாது. நீங்கள் எனக்குப் பிறகு இந்த மக்களை பின்பற்றுங்கள் என்று கூறியவாறு அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பக்கம் சைகை செய்தார்கள். மேலும் அம்மார் (ரலி) அவர்களின் வழிமுறையை மேற்கொள்ளுங்கள். இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள் எதை உங்களுக்கு கூறுவாரோ அவற்றை உண்மைப்படுத்துங்கள் என்று கூறினார்கள்.”**

(சுனன் திர்மதி, அப்பாவுல் மனாகிப் அம்மார் பின் யாஸிர் (ரலி) – ஹதீஸ் எண் 3799)

கடந்த வாரத்தில் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களைப் பற்றி அதாவது ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்கள் குழப்பவாதிகளின் ஏமாற்றுதலுக்கு ஆளாகி விட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கவர்னரை ஆய்வு செய்வதற்காக அன்னாரை அனுப்பிய போது அவர்கள் குழப்பவாதிகளின் கூட்டத்தினரிடம் சென்று விட்டார்கள். மேலும் முழுமையான முறையில் ஆய்வு செய்யவில்லை என்று எடுத்துக் கூறப்பட்டது.

இதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுக்கு எதிராகவும், கிலாஃபத்திற்கு எதிராகவும் ஏற்பட்ட குழப்பங்கள் அனைத்தும் இதனால் தான் உருவானது. அதாவது அம்மக்கள் சரியான தர்பிய்யத் பெறாதவர்களாக இருந்தனர்.

மேலும் மிகக் குறைவாகவே தலைமையகத்திற்கு வருகை தந்தார்கள். அவர்களுக்கு திருக்குர்ஆனின் ஞானம் மிகவும் குறைவாகவே இருந்தது. அவர்களுக்கு மார்க்க அறிவும் மிகவும் குறைவாகவே இருந்தது.

எனவே ஜமாஅத் மக்களுக்கு அன்னார் அந்த நேரத்தில் கவனமூட்டினார்கள். அதாவது **இந்த விஷயங்களிலிருந்து நீங்கள் படிப்பினையும், அறிவுரையும் பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே திருக்குர்ஆனின் ஞானத்தை கற்றுக் கொள்ளுங்கள். எப்போதும் தலைமையகத்தோடு தொடர்பு வைத்திருங்கள். மார்க்க அறிவை கற்றுக் கொள்ளுங்கள். அதன் மூலமாக நீங்கள் வரக்கூடிய காலங்களிலும் எந்தவொரு குழப்பமும் ஜமாஅத்தில் உருவானால் எப்போதும் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள இயலும்.**

(அன்வாரே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 171)

**எனவே இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அனைவருமே தலைமையகத்திற்கு வரவும் முடியாது. மேலும் கிலாஃபத்தோடு தனிப்பட்ட தொடர்பும் இவ்வாறு நிலைபெற முடியாது. எவ்வாறிருப்பினும் ஒரு விஷயம் இருக்கின்றது.**

**அது என்னவென்றால், மார்க்க அறிவை கற்பது, திருக்குர்ஆனின் ஞானத்தை கற்பது ஆகியவற்றிற்கான ஏற்பாடு தற்போது இருக்கின்றது. அல்லாஹ் இக்காலத்தில் M.T.A வின் மூலமாக ஒரு புதிய வழியை நமக்கு திறந்து தந்துள்ளான். நாம் விரும்பினால் இதன் மூலமாக மார்க்க அறிவை கற்றுக் கொள்ள இயலும். திருக்குர்ஆன் தர்ஸ் இதில் வருகின்றது. ஹதீஸின் தர்ஸ் வருகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து தர்ஸ் கொடுக்கப்படுகின்றது. குத்பாக்கள் இருக்கின்றன. இதர சொற்பொழிவுகள் இருக்கின்றன. மாநாடுகள் இருக்கின்றது.**

**எனவே இவ்வகையில் நாம் நம்மையும் நமது சந்ததிகளையும் இந்த வழிமுறைகளின்படி இணைத்தால் இது தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த ஒரு வழியாக இருக்கின்றது. மேலும் இது எல்லா விதமான குழப்பங்கலிருந்தும் காப்பாற்றக் கூடியதாகவும் இருக்கின்றது. மேலும் மார்க்க அறிவை அதிகப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது. எனவே இதன் பக்கம் ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் M.T.A என்ற வழியை தந்துள்ளான். தம்மைத் தாமே அதில் இணைத்துக் கொள்ள வேண்டும்.**

ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்தில் முன்ஸிர் (ரலி) ஒரு சஹாபி ஆவார்கள். அவர்களைப் பற்றியும் எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்களது பெயரில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. சிலர் அவரது பெயரை பஷீர் என்கின்றனர். இப்னு இஸ்ஹாக்கின் பார்வையில் அவரது பெயர் ரஃபாஆ ஆகும்.

அல்லாமா ஸம்ஹஷ்ரி அவர்களின் பார்வையில் அவரது பெயர் மர்வான் என்றும் எழுதப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் அவர் ஒரு அன்ஸாரின் அவ்ஸ் கோத்திரத்தை சார்ந்தவராவார். மேலும் செய்தி சேகரித்து வந்த 12 நபர்களில் ஒருவர் ஆவார். மேலும் இவர் பைத்தே உக்பாவிலும் கலந்து கொண்டுள்ளார்.

பத்ர் போர் சந்தர்ப்பத்தில் மதீனாவிலிருந்து புறப்படும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் அவர்களை மதீனாவின் அமீராக நியமித்தார்கள். ஆனால் மதீனாவிலிருந்து 36 மைல் தொலைவிலுள்ள ரூஹா என்ற இடத்தை அடைந்தபோது, அப்துல்லாஹ் ஒரு பார்வையற்ற மனிதர் ஆவார். மேலும் குறைஷிகளின் படை வருவது தொடர்பான செய்தியானது, அன்னாருக்குப் பின்னால் மதீனாவின் ஏற்பாடுகளும் வலுவானதாக இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்த்தது. எனவே அன்னார் ஹஸ்ரத் அபூ லுபாபா பின் மன்ஸிர் (ரலி) அவர்களை மதீனாவிற்கு

அமீராக நியமித்து திருப்பி அனுப்பினார்கள். மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் (ரலி) அவர்களைக் குறித்து அவர் தொழுகைக்கு மட்டும் இமாமாக இருக்கட்டும். ஆனால் நிர்வாக பணிகளை அபூ லுபாபா (ரலி) அவர்கள் மேற்கொள்வார்கள் என்ற கட்டளையும் பிறப்பித்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்துமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 354)

எவ்வாறிருப்பினும் அவர்கள் பாதி வழியிலேயே திரும்பி சென்று விட்டார்கள்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரிலிருந்து கிடைத்த செல்வத்தில் இவர்களுக்கும் பங்கை நிர்ணயித்தார்கள்.

(அல் அஸாபத் ஃபீ தமீஸிஸ் சஹாபா தொகுதி 7 பக்கம் 290, அபூ லுபாபா பின் அப்தில் மன்ஸிர் (ரலி), 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போரின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) ஆகிய மூவரும் மாறி மாறி ஒட்டகத்தில் சவாரி செய்து வந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) ஆகிய இருவரும் மிகவும் பணிவுடன், நாங்கள் நடந்து வருகின்றோம். ஹுஸூர் சவாரி செய்து வாருங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுடைய கூற்றை ஏற்கவில்லை. மேலும் புன்னகைத்தவாறு, நீங்கள் இருவரும் நடந்து செல்வதில் என்னை விட அதிக வலிமை கொண்டவர்கள் அல்ல. மேலும் உங்கள் இருவரையும் விட நற்கூலியை பெறுவதிலும் நான் அதிக தேவையில்லாதவன் அல்லன் என்று கூறினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்துமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 353 – அத்தப்காத்துல் குபுரா தொகுதி 2 பக்கம் 15,16 – பத்ர் போர், 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் அஹ்யா அத்தராஸில் அரபீயில் அச்சிடப்பட்டது)

பத்ர் போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹார்ஸா அவர்களை மதீனாவாசிகளுக்கு நற்செய்தி வழங்குவதற்காக அனுப்பினார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒட்டகத்தில் வந்தார்கள்.

அந்த ஒட்டகம் தொழும் இடத்தை அடைந்ததும் சவாரியில் இருந்தவாறே அன்னார் உரத்த குரலில், ரபீஆவின் இரண்டு மகன்களான உத்பா மற்றும் ஷைபா மற்றும் ஹிஜாஜ் அவர்களின் மகனான அபூஜஹில் மற்றும் அபுல் பஹ்தரி, ஹம்ஆ பின் அல் அஸ்வத், உமைய்யா பின் ஹலஃப் ஆகிய இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள். மேலும் சுஹைல் பின் அம்ர் மற்றும் பலரும் கைதிகளாகி விட்டனர் என்று கூறினார்.

மக்கள் ஸைது பின் ஹார்ஸா அவர்களது பேச்சை நம்பவில்லை. ஸைது தோற்று விட்டு திரும்பியுள்ளார் என்று கூறினர். இந்த விஷயங்கள் முஸ்லிம்களை கோபத்திற்குள்ளாக்கியது.

நயவஞ்சகர்களில் ஒருவர் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களிடம், உனது தலைவரும், அவருடன் சென்ற அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று கூறினார்.

ஒரு நபர் ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்களிடம், உங்களுடன் வந்தவர்கள் எந்த அளவுக்கு பிரிந்து விட்டார்கள் என்றால் மீண்டும் ஒருபோதும் அவர்கள் ஒன்று சேர மாட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்களது மூத்த சஹாபாக்களும் ஷஹீதாகி விட்டனர். இது அன்னாரது ஒட்டகமாகும். நாம் இதை அறிவோம் என்று கூறினார்.

ஸைது அவர்களுக்கு அச்சத்தின் காரணமாக அவர் என்ன கூறுகின்றார் என்பதையே அறியாதவராக இருக்கின்றார். அவர் தோற்று விட்டு திரும்பியுள்ளார் என்று எதிரிகள் கூறினர்.

ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள், அல்லாஹ் நீங்கள் கூறுபவற்றை பொய்யாக்குவான் என்று கூறினார்கள். யூதர்களும், ஸைது தோல்வியடைந்து தான் திரும்பி வந்துள்ளார் என்றே கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். நான் எனது தந்தையிடம் தனிமையில், தந்தையே! நீங்கள் கூறுவது உண்மையா? என்று கேட்டேன்.

ஹஸ்ரத் ஸைது அவர்கள் கூறினார்கள். எனது மகனே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் கூறுவது உண்மையாகும். ஹஸ்ரத் உஸாமா அவர்கள் கூறுகின்றார்கள். இந்த கூற்றை கேட்டு எனது உள்ளம் வலுப்பெற்றது.

(கிதாபுல் மகாஸி தொகுதி 1 பக்கம் 141 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்களின் எளிமை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அர்ப்பணிப்பு தொடர்பான சம்பவம் இவ்வாறு வருகின்றது.

ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ் போரிலிருந்து நகரத்திற்கு திரும்பி வந்தார்கள். அன்னார் மிகவும் கஷ்டத்துடன் தமது ஆயுதங்கள் போன்றவற்றை கழற்றி விட்டு குளிப்பதற்காக ஆயத்தமானபோது அன்னாருக்கு அல்லாஹ் கஷ்ஃபின் மூலமாக, எப்போது வரை பனு குரைழாவின் ஏமாற்றுதல் மற்றும் கிளர்ச்சி ஆகியவற்றிற்கான முடிவு தெரியவில்லையோ அப்போது வரை ஆயுதங்களை கழற்ற வேண்டாம் என கூறப்பட்டது.

அன்னார் சஹாபாக்களிடம், எல்லா மக்களும் பனூ குரைலாவின் கோட்டைக்கு திரும்பி செல்லுமாறும், அஸர் தொழுகை அங்கு சென்று தொழப்படும் என்று கூறினார்கள். ஆரம்பத்தில் யூதர்கள் கடுமையான ஆணவத்தை வெளிப்படுத்தி வந்தார்கள். ஆனால் காலம் செல்ல செல்ல அவர்களே முஸ்லிம்களாகிய இவர்கள் நமது கோட்டையை சூழ்ந்து விட்டார்கள் என்பதையும் தமது இயலாமையையும் உணர்ந்தார்கள்.

இறுதியில் அவர்கள் தமக்கிடைய தற்போது என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை செய்தனர். எவ்வாறிருப்பினும் அவர்கள் இந்த முடிவிற்கு வந்தார்கள். அதாவது, இவர்களுடைய தொடர்பில் இருக்கக்கூடியவர்களின் இவர்களுடைய பொய்யில் சிக்கக்கூடிய ஏதாவதொரு முஸ்லிமை தமது கோட்டைக்கு அழைக்கலாம். மேலும் அவரின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள்? மேலும் அதன் அடிப்படையில் அடுத்த முன்னேற்பாடுகளை செய்யலாம் என்று அவர்கள் முடிவெடுத்தார்கள்.

எனவே அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு தூதுவரை அனுப்பி, நாங்கள் ஆலோசனை நடத்துவதற்காக அபூ லுபாபா பின் மன்ஸர் அன்ஸாரி (ரலி) அவர்களை தமது கோட்டைக்கு அனுப்பி வைக்குமாறு முறையிட்டனர். அன்னார் அபூ லுபாபா (ரலி) அவர்களுக்கு அதற்கான அனுமதியை வழங்கினார்கள். மேலும் அவர் அவர்களது கோட்டைக்கு சென்றார்கள்.

பனூ குரைலாவை சார்ந்தவர்கள் முதலிலேயே இந்த திட்டத்தை வகுத்திருந்தார்கள். அதாவது அபூ லுபாபா (ரலி) அவர்கள்

கோட்டைக்குள் வந்த உடனேயே யூதர்களின் அனைத்து பெண்களும் குழந்தைகளும் அழுது மன்றாடியவாறு அவர்களை சூழ்ந்து கொள்ள வேண்டும். மேலும் தமது துக்கங்களையும், சோதனைகளையும் எடுத்துரைத்தவாறு அவருடைய உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை செய்ய வேண்டும். இறுதியாக அபூ லுபாபா (ரலி) அவர்கள் மீது இவர்களது பொய்யான தாக்கம் ஏற்பட்டது.

அபூ லுபாபாவே! நீர் எங்களது நிலைமைகளை எவ்வாறு காண்கின்றீர்? நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முடிவின்படி எங்களது கோட்டையிலிருந்து கீழே இறங்கி வரவா? என்று பனூ குரைலாவைச் சேர்ந்தவர்கள் கேட்டதற்கு, அபூ லுபாபா அவர்கள், கீழே இறங்கி வாருங்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களை கொல்வதற்கான கட்டளையையே வழங்குவார்கள் என்று தமது கழுத்தில் தடவி சைகையாக கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலை ஏமாற்றி விட்டதாகவோ அல்லது நான் காண்பித்த சைகை தவறான முறையில் செய்து விட்டேன் என்பதையோ உணர்ந்தபோது அன்னாரது கால்கள் நடுங்கியன.

அபூ லுபாபா (ரலி) அவர்கள் அங்கிருந்து மஸ்ஜிது நபவிக்கு வந்தார்கள். மேலும் தமக்குரிய தண்டனையாக பள்ளிவாசலிலேயே ஒரு தூணில் தன்னைத்தானே கட்டினார்கள். மேலும் கூறினார்கள். எப்போது வரை இறைவன் எனது தவ்பாவை ஏற்றுக் கொள்ள மாட்டானோ அப்போது வரை இவ்வாறே கட்டப்பட்டிருப்பேன்.

ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் பனூ குரைலா சென்றது மற்றும் அங்கு நான் நடந்து கொண்ட முறை பற்றிய அனைத்து விஷயங்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வந்தது. அப்போது அன்னார் கூறினார்கள். அவரை விட்டுவிடுங்கள். எதுவரை என்றால் இறைவன் அவரோடு எவ்வாறு நடக்க விரும்புகின்றானோ அவ்வாறு நடந்து கொள்வான். அவர் என்னிடத்தில் வந்திருந்தால் நான் அவருக்காக பாவமன்னிப்பு கோரி இருப்போன். ஆனால் அவர் என்னிடம் வராமலேயே சென்று விட்டதனால் அவரை செல்ல விடுங்கள் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

நான் பதினைந்து நாட்கள் இந்த துன்பத்திலேயே இருந்தேன்.

ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

நான் ஒரு கனவில் பார்த்தேன். மேலும் அதை மனனம் செய்து வந்தேன். நான் கனவில் கண்டேன். அதாவது நாங்கள் பனூ குரைலாவை சூழ்ந்திருக்கின்றோம். நான் ஒரு துர்நாற்றமுடைய சகதியில் இருக்கின்றேன். என்னால் அதிலிருந்து வெளி வர முடியவில்லை. நான் அந்த துர்நாற்றத்திலேயே அழிந்து விடும் நிலை ஏற்பட்டது. பிறகு நான் ஓடுகின்ற ஒரு நதியை பார்த்தேன். பிறகு நான் அதில் குளிப்பதாக பார்க்கின்றேன். எதுவரை என்றால் நான் என்னை தூய்மையாக்கிக் கொண்டேன். அப்போது எனக்கு நறுமணம் வீசியது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இதற்கான விளக்கத்தை கேட்பதற்காக அன்னார் சென்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதற்கான விளக்கத்தை கூறும்போது எப்படிப்பட்ட ஒரு விவகாரம் உமக்கு ஏற்படும் என்றால் அதனால் உமக்கு துக்கம் ஏற்படும். பிறகு இதிலிருந்து உமக்கு இரட்சிப்பு வழங்கப்படும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது கைகள் கட்டப்பட்டிருந்த நிலையில் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களின் கூற்றை நினைவு கூர்ந்து வந்தேன். மேலும் எனது தவ்பா ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் நம்பிக்கை வைத்திருந்தேன்.

ஹஸ்ரத் உம்மே சல்மா (ரலி) கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்களது தவ்பா ஏற்றுக் கொள்ளப்பட்டது தொடர்பான செய்தி எனது வீட்டில் இறங்கியது. (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இந்த வஹி அந்த நேரத்தில் இறங்கியது.)

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சஹ்ர் நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்னகைப்பதை கண்டேன். நான் அன்னாரிடம், அல்லாஹ் எப்போதும் உங்களை சிரித்த முகத்துடன் வைப்பானாக. தாங்கள் எதற்காக சிரித்தீர்கள்? என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ லுபாபா (ரலி) அவர்களின் தவ்பா ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்று கூறினார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அவருக்கு இதைப் பற்றி தெரிவித்து விடட்டுமா? என்று கேட்டேன். அதற்கு அன்னார், நீங்கள் விரும்பினால் தெரிவித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மே சல்மா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் அந்த கூடாரத்தின் வாசலில் நின்று கொண்டு இவ்வாறு கூறினேன். (இது பர்தா தொடர்பான கட்டளை அருளப்பட்ட காலத்திற்கு முந்தைய சம்பவமாகும்). அபூ லுபாபாவே! மகிழ்ச்சியடையுங்கள். அல்லாஹ் உங்கள் மீது அருள் செய்தவாறு உங்களது தவ்பாவை ஏற்றுக் கொண்டான்.

மக்கள் ஓடிச் சென்றவாறு அபூ லுபாபா (ரலி) அவர்களை அவிழ்க்க முற்பட்டார்கள். ஆனால் அவர்களோ, இல்லை! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் என்னை அவிழ்த்து விடுவார்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பஜ்ர் தொழுகைக்காக சென்றிருந்தார்கள். தமது புனித கரங்களால் அவர்களை அவிழ்த்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நான் எனது சொந்த ஊரை எங்கு என்னிடமிருந்து இந்த தவறு நிகழ்ந்ததோ அந்த இடத்தை விட்டு விடுகின்றேன். மிகப்பெரிய தவறான விஷயம் என்னிடமிருந்து நிகழ்ந்து விட்டது. எனவே நான் எனது வீட்டை விட்டு விடுகின்றேன். மேலும் நான் எனது செல்வத்தை அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் வழியில் சதகாவாக கொடுத்து விடுகின்றேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மூன்றில் ஒரு பங்கை சதகாவாக கொடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்களும் மூன்றில் ஒரு பகுதியை சதகாவாக கொடுத்தார்கள். மேலும் அன்னார் தமது சொந்த வீட்டையும் விட்டு விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 597–599, அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 261,262, அபூ லுபாபா (ரலி) – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவம் பற்றிய விளக்கத்தை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இந்த விளக்கம் மட்டுமின்றி வேறு சம்பவங்களின் அடிப்படையில் மேலும் விளக்கம் அளித்துள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்:

பனூ குரைழாவின் விவகாரம் முடிவு பெற இருந்தது. அவர்கள் செய்த அந்த துரோகமானது கண்டும் காணாமல் விடத்தக்கதாக இருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்த உடனேயே தமது சஹாபாக்களிடம், வீட்டில் ஒய்வெடுக்காதீர்கள். மாறாக, மாலைப்பொழுதிற்கு முன்பாகே பனூ குரைழாவின் கோட்டையை சென்றடையுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் ஹஸ்ரத் அலி அவர்களை பனூ குரைழாவிடம் அவர்கள் தமது உடன்படிக்கைக்கு மாற்றமாக ஏன் இவ்வாறு செயல்பட்டார்கள்? என்று கேட்டு வருமாறு அனுப்பினார்கள். (அவர்கள் உடன்படிக்கையை பாதியிலேயே விட்டு விட்டுச் சென்று விட்டார்கள்.) அவர்கள் வெட்கப்படுவதற்கு அல்லது மன்னிப்பு கேட்பதற்கு பகரமாக ஹஸ்ரத் அலி மற்றும் அவர்களுடனிருப்பவர்களை தவறாக பேச ஆரம்பித்தனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், அன்னாரது குடும்பத்து பெண்களையும் ஏசிப் பேசினார்கள்.

மேலும் எங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்டவர் என்று தெரியாது? அவரோடு எங்களுக்கு எந்த உடன்படிக்கையும் கிடையாது என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி இந்த பதிலை பெற்றுக் கொண்டு திரும்பினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களுடன் யூதர்களின் கோட்டையை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். யூதர்கள் மிகவும் மோசமான தீய வார்த்தைகளை பேசி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகள்கள் மற்றும் மனைவிமார்கள் தொடர்பாக மிகவும் அசுத்தமான வார்த்தைகளை கூறி வந்தனர்.

எனவே அன்னாருக்கு இவ்விஷயங்களினால் மிகுந்த துக்கம் ஏற்படும் என்று எண்ணியவாறு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் ஏன் துன்பத்தை மேற்கொள்கின்றீர்கள். நாங்களே இந்த போருக்கு போதுமானவர்களாவோம். நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்கள் என்னை பழித்துரைக்கின்றனர் என்பது எனக்கு தெரிகின்றது. மேலும் நீங்கள் அந்த பழித்துரைத்தல் என் காதுகளில் விழக்கூடாது என்று விரும்புகின்றீர்கள்.

அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், ஆமாம்! இந்த விஷயம் தான் அல்லாஹ்வின் தூதரே என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்கள் ஏசிப்பேசினால் என்ன? மூஸா நபி அவர்களுடைய நபியே ஆவார். அவர்களுக்கு இதை விட அதிமான துன்பத்தை இந்த மக்கள் இழைத்தனர் என்று கூறினார்கள்.

இதை கூறியவாறு அன்னார் யூதர்களின் கோட்டையின் பக்கம் சென்றார்கள். ஆனால் யூதர்களின் கதவுகளும், கோட்டைகளும் அடைக்கப்பட்டிருந்தன. முஸ்லிம்களுடன் அவர்கள் போர் செய்ய ஆரம்பித்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்களுடைய பெண்களும் கூட அந்த போரில் கலந்து கொண்டார்கள்.

இதன் விளைவாக கோட்டையின் கதவுகளுக்கு கீழே சில முஸ்லிம்கள் அமர்ந்திருந்தனர். ஒரு யூத பெண்மணி மேலிருந்து கல்லை எறிந்து ஒரு முஸ்லிமை கொன்று விட்டாள். ஆனால் சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் பிடிக்கப்பட்ட பிறகு யூதர்கள் நம்மால் நீண்ட போரை நடத்த இயலாது என்று எண்ணியவாறு அவர்களுடைய தலைவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அவர்களின் நண்பரும், அவ்ஸ் கோத்திரத்தின் தலைவருமாகிய அபூ லுபாபா அன்ஸாரி (ரலி) அவர்களிடம் ஆலோசனை செய்வதற்காக அவர்களிடம் அனுப்பி வைக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அன்னார் அபூ லுபாபா (ரலி) அவர்களை அனுப்பினார்கள்.

யூதர்களும் ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்களிடம், நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முடிவான ஆயுதங்களை எறிந்து விட்டு என்னிடம் சரணடையுங்கள் என்பதை ஏற்றுக் கொள்ளட்டுமா? என்று வினவினர்.

அபூ லுபாபா (ரலி) அவர்கள் நாவினால் ஆம் என்றாலும் கொல்லப்படுவது போன்று சைகையால் கழுத்தை தனது கைளால் தடவினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நேரம் வரை தனது எந்த முடிவையும் வெளிப்படுத்தவில்லை. ஆனால் அபூ லுபாபா (ரலி) அவர்களோ, இவர்கள் செய்த தவறுக்கான தண்டனை கொலை செய்யப்படுவதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும் என்று தமது உள்ளத்தில் நினைத்து கொண்டார்கள்.

எதுவுமே யோசிக்காமல் சைகையினால் ஒரு விஷயத்தை கூறி விட்டார்கள். இறுதியாக இதன் விளைவு என்னவாயிற்று என்றால் அது யூதர்களின் அழிவிற்கு காரணமாகி விட்டது.

யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ள மறுத்து விட்டார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முடிவை ஏற்றுக் கொண்டிருந்தால் அதிகபட்சமாக அவர்களுக்குரிய தண்டனையாக யூதர்களின் மற்ற கோத்திரத்தினருக்கு கொடுக்கப்பட்ட தண்டனையைப் போன்று மதீனாவை விட்டு மட்டுமே அவர்கள் வெளியேற்றப்பட்டிருப்பார்கள்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர்கள், நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முடிவை ஏற்க தயாராக இல்லை.

மாறாக, நாங்கள் ஹலீஃப் கோத்திரத்தின் தலைவரான ஸஅத் பின் மஆத் (ரலி) அவர்களது முடிவையே ஏற்போம். அவர் எந்த முடிவை எடுத்தாலும் நாங்கள் ஏற்போம் என்று அறிவித்தனர்.

ஆனால் அந்த சமயத்தில் யூதர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. யூதர்களில் சிலர், நம்முடைய சமுதாயம் அவர்களை ஏமாற்றியுள்ளது. மேலும் முஸ்லிம்களின் செயல்பாடுகளிலிருந்து அவர்களது மார்க்கம் உண்மையாகும் என்பது தெரிய வருகின்றது என்று கூறினர். அந்த மக்கள் தமது மார்க்கத்தை துறந்து விட்டு இஸ்லாத்தில் நுழைந்தனர்.

உமர் பின் ஸஅதி என்ற ஒரு நபர் இந்த சமுதாயத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். தமது சமுதாயத்தை அச்சமூட்டினார். நீங்கள் ஏமாற்றியுள்ளீர்கள். உடன்படிக்கையை முறித்துள்ளீர்கள். எனவே நீங்கள் இப்போது முஸ்லிமாகி விடுங்கள். அல்லது ஜிஸ்யா செலுத்துவதில் திருப்தி அடையுங்கள் என்று கூறினார். அதற்கு யூதர்கள், நாங்கள் முஸ்லிமாகவும் மாட்டோம். ஜிஸ்யாவும் செலுத்த மாட்டோம். இதை விட கொல்லப்படுவதே சிறந்தது என்று கூறினர்.

எனவே அவர் அவர்களிடம் நான் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன் என்று கூறி அந்த கோட்டையிலிருந்து அவர் வெளியேறினார். அவர் கோட்டையிலிருந்து வெளியேறிய போது முஸ்லிம்களின் ஒரு படையின் தலைவரான முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் அவரைப் பார்த்து விட்டார்கள். மேலும் அவரிடம் நீங்கள் யார்? என்று வினவினார்கள். அதற்கு அவர் நான் இன்ன நபராவேன் என்று கூறினார்.

அதற்கு முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

اَللّٰهُمَّ لَا تَحْرِمْنِیْ اِقَالَةَ عَثَرَاتِ الْكِرَامِ

அதாவது நீங்கள் சாந்தியுடன் சென்று விடுங்கள் என்று கூறினார்கள்.

மேலும் அல்லாஹ்விடம், இறைவா! என்னை நீ நேர்மையானவர்களின் தவறுகளை மறைக்கக்கூடிய நல்ல பணிகளை செய்வதிலிருந்து ஒருபோதும் விலக்கி வைக்காதிருப்பாயாக என்று துஆ செய்தார்கள். அதாவது இந்த மனிதன் தனது செயல்கள் மற்றும் தமது சமுதாயத்தின் செயல்களின் காரணமாக செய்வதறியாதவராக இருந்தார்.

எனவே அவர் மன்னிக்க வேண்டும் என்பது நமது நல்லொழுக்க கடமையானது எதிர்பார்க்கின்றது. நான் அவரை கைது செய்யவில்லை. மாறாக அவரை விட்டு விட்டேன். இறைவன் எனக்கு எப்போதும் இவ்வாறான நல்ல பணிகளை செய்வதற்குரிய பாக்கியத்தை வழங்கிக் கொண்டே இருப்பானாக என்று அவர் கூறினார்.

இந்த சம்பவத்தைப் பற்றிய செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது அன்னார் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களைப் பார்த்து ஏன் அந்த யூதனை விட்டு விட்டீர்கள்? என்று கேட்கவில்லை. மாறாக, அவர்களது பணியை போற்றினார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 282–284)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக அவர்கள் கொடுமை இழைத்தார்கள், மேலும் யூத கோத்திரங்களை கொலை செய்தார்கள், அநீதி இழைத்தார்கள் என்று கூறுகின்றார்கள். ஆனால் இவர்களே தமது அழிவிற்கு பொறுப்பாளிகளாக விளங்கினர். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முடிவை ஏற்பதற்கு பகரமாக இன்னொரு சமுதாயத்தின் தலைவரிடன் முடிவை ஏற்றார்கள். மேலும் அவர்களது வேத நூலின் அடிப்படையில் இந்த முடிவை எடுத்தனர். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அன்னாரது சஹாபாக்களும் அநீதி இழைத்தார்கள் என்று எவ்வித குற்றச்சாட்டும் சுமத்த இயலாது.

அல்லாமா இப்னு ஸஅத் அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஓர் அறிவிப்பில் வருகிறது. கைனிகா போர் மற்றும் ஸவீக் போரிலும் ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் தமது பிரதிநிதியாக இருப்பதற்கான வாய்ப்பை வழங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 22, பாபு கேன்கா மற்றும் ஸவீக் போர், 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் அஹ்யா அத்தராஸில் அரபீயில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்கள் மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு பயணத்தில் கூடவே இருந்தார்கள். அன்ஸார்களின் அம்ர் பின் அவ்ஃப் என்ற கோத்திரத்தின் கொடி அவர்களின் கையில் இருந்தது. ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு போரிலும் கலந்து கொண்டுள்ளார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 349, அபூ லுபாபா பின் அப்துல் மன்ஸர் (ரலி), 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் அஹ்யா அத்தராஸில் அரபீயில் அச்சிடப்பட்டது)

அவர்களது மரணம் தொடர்பாக இவ்வாறு வருகின்றது. சிலர் ஹஸ்ரத் அபூ லபாபா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானர்கள் என்று கூறுகின்றனர். மேலும் சிலர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களது ஷஹாதத்திற்குப் பிறகு அன்னாரது வஃபாத் நடந்தது என்று கூறுகின்றார்கள். மேலும் அவர்கள் ஹிஜ்ரி 50 வரை உயிரோடு இருந்தார்கள் என்ற ஒரு செய்தியும் காணப்படுகிறது.

(அல் அஸாபத்து ஃபீ தமீஸிஸ் சஹாபா தொகுதி 7 பக்கம் 290, அபூ லுபாபா பின் அப்துல் மன்ஸர் (ரலி), 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஸயீத் பின் முஸய்யப் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்துல் மன்ஸர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளன்று மழை வேண்டி துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ اسْقِنَا ۔ اَللّٰهُمَّ اسْقِنَا ۔ اَللّٰهُمَّ اسْقِنَا

அல்லாஹ்வே! எங்கள் மீது மழையைப் பொழியச் செய்வாயாக. அல்லாஹ்வே! எங்கள் மீது மழையைப் பொழியச் செய்வாயாக. அல்லாஹ்வே! எங்கள் மீது மழையைப் பொழியச் செய்வாயாக.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார். எங்களுக்கு வானத்தில் எவ்வித மேக மூட்டமும் தென்படவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வே! எங்கள் மீது மழையைப் பொழியச் செய்வாயாக. எந்த அளவுக்கு என்றால் ஹஸ்ரத் அபூ லபாபா (ரலி) அவர்கள் தனது தோட்டத்திலுள்ள ஓடைகளை தமது ஆடையைக் கொண்டு தண்ணீரை அடைக்கும் வரை மழையை பொழியச் செய்வாயாக என்று துஆ செய்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள். இதற்குப் பிறகு வானத்திலிருந்து மழை பெய்ய ஆரம்பித்தது. மேக மூட்டம் தென்பட்டது. மழை பெய்தது. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழ வைத்தார்கள்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார். ஒரு அன்ஸார் ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்களிடத்தில் வந்து கூறினார். அபூ லுபாபாவே! இறைவன் மீது ஆணையாக! எப்போது வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது போன்று நீர் உமது ஆடைகளினால் உமது தோட்டத்திலுள்ள தண்ணீர் ஓடைகளை அடைக்க மாட்டீரோ அப்போது வரை இந்த மழை நிற்காது என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய படி அன்னார் செய்தார்கள். இதன் விளைவாக மழை நின்றது.

(சுனன் அல்குபுரா லில் பேஹக்கி தொகுதி 3 பக்கம் 500, கிதாப் ஸலாத்துல் இஸ்தஸ்கா... ஹதீஸ் எண் 6530, 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள மக்தபத்துர் ரஷதில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள் தமது மகள் வழி பேரனும், ஹஸ்ரத் உமர் அவர்களின் சகோதரனின் மகனுமான அப்துர் ரஹ்மான் பின் ஸைதை பேரித்தம் பழத்தின் கிளையால் அவரை போர்த்தியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ லுபாபாவே! உம்மிடத்தில் என்ன இருக்கின்றது? என்று வினவினார்கள். ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது மகள் வழி பேரன் என்னிடத்தில் இருக்கிறான். நான் இவனைப் போன்ற ஒரு பலவீனமான குழந்தையை பார்த்ததேயில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த குழந்தையை தூக்கினார்கள். அந்த குழந்தையின் தலை மீது தமது கரங்களை

தடவினார்கள். மேலும் துஆ செய்தார்கள். அந்த துஆவின் அருளால் அப்துர் ரஹ்மான் பின் ஸைது அவர்கள் மக்களோடு எப்போது ஸஃப்பில் நின்றாலும் எல்லாரையும் விட மிக உயரமானவராகவே தெரிந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் தமது மகளான ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் அவர்களது வயிற்றில் பிறந்த ஃபாத்திமா அவர்களோடு அவர்களது திருமணத்தை செய்து வைத்தார்கள்.

(அம்தாவுல் அஸ்மாஃ தொகுதி 6 பக்கம் 146... 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களில் இருவரது வீடு வெகு தொலைவில் இருந்தது. ஒருவர் ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்தில் மன்ஸர் அவர்களாகும். அவர்களுடைய வீடு கப்பாவில் இருந்தது. மற்றொன்று ஹஸ்ரத் அபூ அப்ஸ் பின் ஜபரிய்யா உடையதாகும். இவர்கள் பனூ ஹார்ஸா கோத்திரத்தாருடன் இருந்து வந்தனர். இவர்கள் இருவரும் அஸர் தொழுகையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு தொழுவதற்கு வந்து கொண்டிருந்தார்கள்.

(அல்முஸ்தத்ரக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 1 பக்கம் 309, கிதாபுஸ் ஸலாத்... ஹதீஸ் எண் 703 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இதுவே இந்த சஹாபாக்களின் நிலைமைகளாகும். அல்லாஹ் அவர்களது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அவற்றில் ஒரு ஜனாஸா இங்கு இருக்கின்றது. மற்றொன்று ஜனாஸா காயிப் ஆகும்.

ஜனாஸா காயிப் லாஹூர் சவாபா கார்டனைச் சார்ந்த மதிப்பிற்குரிய காஸி ஷஃபான் அஹ்மது கான் சாஹிப் அவர்களுடையதாகும். காஸி முஹம்மது சல்மான் அவர்களுடைய மகனான காஸி ஷஃபான் அஹ்மது கான் சாஹிப் அவர்களை 25 ஜூன் 2018 அன்று எதிரிகள் வீட்டில் நுழைந்து சுட்டு ஷஹீதாக்கினார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரது வயது 47. அறிக்கையின் அடிப்படையில் 25 ஜூன் அன்று இரவு நேரத்தில் முகமுடி அணிந்த இருவர் அன்னாரது வீட்டிற்குள் நுழைந்தார்கள். காஸி சாஹிப் அவர்களும் அவர்களது மனைவியும் ஓர் அறையில் இருந்தார்கள். அவர்களது மகள்கள் இன்னொரு அறையில் இருந்தனர். காஸி சாஹிப் அவர்களது மனைவி வாஷ் ரூமில் இருந்தார்கள். அவர்கள் வெளியே வந்த போது முகமுடி அணிந்த இருவர் அங்கிருந்தனர்.

முகமுடி அணிந்தவர்களில் ஒருவன் காஸி சாஹிப் அவர்களின் மனைவியின் தலையில் துப்பாக்கியை வைத்தான். அவர்களை அவர்களது மகள்கள் இருந்த அறைக்கு கொண்டு சென்றான். இன்னொரு அறையில் காஸி சாஹிப் அவர்கள் இருந்தார்கள். அவன் மூன்று முறை அவர்களது வயிற்றில் சுட்டான். இதன் விளைவாக அவர்கள் சம்பவ இடத்திலேயே வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

ஷஹீது மர்ஹூம் அவர்கள் 2001 ஆம் ஆண்டு முஹம்மது இக்பால் என்ற நமது நண்பரின் மூலமாக தமது குடும்பத்துடன் பைஅத் செய்தார். காஸி சாஹிப் காஷ்மீரிலுள்ள முஸஃப்பராபாதை சார்ந்தவர்கள் ஆவர். 2001 ஆம் ஆண்டு லாஹூர் சவாபா கார்டனிலுள்ள நஷ்தர் காலனியில் குடியேறினார்கள். இதற்கு சில காலத்திற்கு முன்னால் அன்னார் லாஹூரிலுள்ள டாவுன் ஷிப்பிலும் இருந்துள்ளார்கள்.

காஸி ஷஃபான் சாஹிப் அவர்கள் பலவீனமான குழந்தைகளுக்கான பள்ளிக்கூடத்தை நடத்தி வந்தார்கள். அவர்களது தங்குமிடம் பள்ளிக்கூடத்தின் மேல் மாடியில் இருந்தது. அன்று அவர்களது வீட்டின் கீழ்ப்பகுதியில் பள்ளிக்கூடத்தின் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருந்தன. இந்த இடத்தில் முகமுடி அணிந்த இருவரும் முன்பாகவே வந்து ஒளிந்து கொண்டனர். பிறகு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தாக்குதல் நடத்தினார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் எண்ணற்ற நற்பண்புகளுக்கு உரியவர் ஆவார். பைஅத்திற்குப் பிறகு காஸி சாஹிப் அவர்கள் கலப்பற்ற நபராகவும், சிறந்த மனிதராகவும் நிரூபணமானார்கள். கிலாஃபத்தோடு கலப்பற்ற அன்பும், ஆழமான தொடர்பும் இருந்தது. தாமும், தமது குடும்பமும் கிலாஃபத்தோடு தொடர்பில் இருக்க வேண்டும் என்பதற்காக ஷஹீது மர்ஹூம் அவர்கள் தமது வீட்டில் M.T.A பார்ப்பதற்காக டிஷ்ஷை வைத்திருந்தார்கள். பொருள் தியாகங்களில் போட்டி போட்டுக் கொண்டு பங்கெடுக்கக் கூடியவராக திகழ்ந்தார்கள்.

ஆமிலாவில் Audio & Video செயலராக தொண்டாற்றினார்கள். மக்களின் டிஷ் ஆண்டனாவை எவ்வித கூலியும் பெறாமல் சரி செய்து கொடுத்து வந்தார்கள். காஸி சாஹிப் அவர்களது திருமணம் அவர்களது நெருங்கிய உறவினரோடு நடைபெற்றது. இருவரது குடும்பங்களிலும் காஸி சாஹிப், அன்னாரது மனைவி மற்றும் அவர்களுடைய குழந்தைகள் மட்டுமே அஹ்மதி ஆவார்கள். குடும்ப உறுப்பினர்கள் இவர்கள் அஹ்மதியானதால் அவர்களுக்கு எதிரியானார்கள்.

சில நாட்களுக்கு முன்னால் அன்னாரது மச்சான் வீட்டிற்கு வந்தார். நீங்கள் மிர்ஸாயி ஆகிவிட்டீர்கள் என்று எங்களுக்கு தெரிய வந்தது என்று கூறினார். அப்போது அவரது பார்வை மாடியிலுள்ள டிஷ் ஆண்டனாவின் மீது பட்டது. அதை அவர் உடைத்தார். காஸி சாஹிப் அவரை தடுத்தார்கள். எனவே இருவருக்குமிடையில் சில கசப்பான வார்த்தைகளும் வெளிவந்தன. இதற்குப் பிறகு அவரது மச்சான் தனது சகோதரியிடம், உனது நிக்காஹ் முறிந்து விட்டது. எனவே நீ என்னுடன் வா. ஏனென்றால் உனது கணவர் மிர்ஸாயி ஆகிவிட்டார் என்று கூறினார்.

அதற்கு காஸி சாஹிப் அவர்களது மனைவி தனது சகோதரனிடம், நானும் அஹ்மதியாவேன். மேலும் முஸ்லிமாவேன். மேலும் நான் காஸி சாஹிப் அவர்களையும் முஸ்லிம் என்றே கருதுகின்றேன். உன்னுடன் எங்கேயும் வர மாட்டேன் என்று கூறினார்கள்.

அவர்களது மனைவி கூறுகின்றார்கள். ஷஹீது மர்ஹூமிற்கு எதிரிகள் தரப்பிலிருந்து மிரட்டல்கள் கொடுக்கப்பட்டு வந்தன. அதன் விளைவாக அவர்கள் மிகுந்த கவலையில் இருந்தார்கள். சில நாட்களாகவே அமைதியாக இருந்தார்கள். மேலும் வீட்டை விட்டு வெளியே மிகக் குறைவாகவே சென்று வந்தார்கள்.

மதிப்பிற்குரிய ஷஹீது காஸி சாஹிப் அவர்கள் தனது மனைவிடம், எனக்கு ஏதாவது ஆகி விட்டால் முதலில் சதர் சாஹிப் அவர்களுக்கு அதற்கான தகவலை தெரிவிக்கவும் என்று கூறியிருந்தார்கள்.

எனவே ஷஹாதத் சம்பவம் நடைபெற்ற பிறகு அவர்கள் அவ்வாறே செய்தார்கள். ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு தகவல் கொடுத்தார்கள். அவர்களது சொந்த பந்தங்களான ஜமாஅத்தை

சாராதவர்கள் அங்கு வந்திருந்த போதிலும் மிகவும் நிலைத்திருத்தலை கடைபிடித்தவாறு ஜனாஸா தொழுகையை அஹ்மதிகள் தான் தொழ வைப்பார்கள். நல்லடக்கமும் அஹ்மதிகள் தான் செய்வார்கள் என்று கூறினார்கள். காஸி சாஹிப் அவர்களது சில நண்பர்கள் பைத்துன் நூர் பள்ளிவாசலுக்கும் வந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் ஜனாஸா தொழுகை தொழவில்லை. காஸி சாஹிப் அவர்களது மனைவியும், குழந்தைகளும் ஜனாஸாவுடன் கபருஸ்தான் வரை வந்திருந்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் தமக்குப் பின்னால் 40 வயதுமிக்க மதிப்பிற்குரிய ஷஃனாஸ் ஷஃபான் சாஹிபா என்ற தமது மனைவியையும், 19 வயதுமிக்க அஸீஸா கரன், 18 வயதுமிக்க சுதுரா ஷஃபான் மேலும் 11 வயதுமிக்க மலாயிக்க என்ற மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

இந்த மூன்று குழந்தைகளும் போலியோவின் காரணமாக கொஞ்சம் பலவீனமானவர்கள் ஆவர். இவர்கள் அனைவருக்கும் அல்லாஹ்வே பாதுகாவலனாக இருப்பானாக. இவர்களை எல்லா பிரச்சனைகளிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. மேலும் காஸி சாஹிப் அவர்களது அந்தஸ்தை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா இங்கு இருக்கின்றது. அது மதிப்பிற்குரிய சேட் முஹம்மது கவ்ஸ் சாஹிப் அவர்களது மகளான மதிப்பிற்குரிய அம்மத்துல் ஹய் சாஹிபா அவர்களுடையதாகும். ஜூன் 23 ஆம் தேதி வஃபாத்தானார்கள். அன்னாருக்கு 100 வயதை விட அதிகமாகும்.إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களது தந்தையான சேட் முஹம்மது கவ்ஸ் சாஹிப் அவர்களிடம் இரண்டு சிறப்பம்சங்கள் இருந்தன. இவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் சஹாபி இல்லையென்றாலும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அன்னாரை காதியானிலுள்ள பஹஷ்தி மக்பராவில் சஹாபாக்களுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் நல்லடக்கம் செய்வதற்கான அனுமதியை வழங்கினார்கள்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 14 பக்கம் 211)

அவர்களது இரண்டாவது சிறப்பம்சம், அஸ்ஹாபே அஹ்மது என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது. அதாவது கடந்த 42 ஆண்டுகளில் எந்த இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் புனித உடல் வைக்கப்பட்டிருந்ததோ அதே இடத்தில் அன்னாரது ஜனாஸாவும் இன்று வைக்கப்பட்டிருந்து அங்கு தொழ வைக்கப்பட்டது.

மேலும் அந்த சமயத்தில் ஹஸ்ரத் ஷேக் யஃகூபு அலி இர்ஃபானி சாஹிப் அவர்கள் ஒரு ஸ்டூல் அல்லது நாற்காலியில் ஏறி நின்றவாறு இதற்கான தமது சாட்சியையும் வழங்கினார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மது தொகுதி 9 பக்கம் 268,269 – சீரத் ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் சாஹிப் காதியானி (ரலி)

அம்மதுல் ஹய் சாஹிப் அவர்களது நிக்காஹ் சமயத்தில் அன்னாரது தந்தை இருந்த போதிலும் அவர்களது விருப்பத்திற்கேற்ப ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தாமே வலியாக இருந்து நிக்காஹ்வை நடத்தினார்கள். மேலும் தமது குத்பாவில் கூறினார்கள்.

சேட் சாஹிபின் இளைய மகள் அம்மத்துல் ஹய் அவர்களின் நிக்காஹ் அறிவிப்பை நான் இப்போது செய்கின்றேன். அவர்களது நிக்காஹ் மதிப்பிற்குரிய டாக்டர் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் நெருங்கிய உறவினரும், மருமகனுமான முஹம்மது யூனுஸ் சாஹிப் அவர்களோடு நடைபெறுகின்றது. இந்த நிக்காஹ்விலும் சேட் சாஹிப் கலப்பற்ற தன்மையையே முன்னிலைப்படுத்தியுள்ளார். அவர்களுக்கு நான், ஹைதராபாதில் நிக்காஹ் செய்யுங்கள் என்று எழுதியிருந்தேன். ஆனால் காதியான் அல்லது பஞ்சாபில் சம்பந்தம் ஏற்பட்டால் காதியான் வந்து செல்ல மேலும் அதிகமாக நம்மிடம் ஒரு உந்துதல் உருவாகும் என்ற விருப்பம் அவர்களுக்கு இருந்தது.

முஹம்மது யூனுஸ் சாஹிப் அவர்கள் தில்லிக்கு அருகிலுள்ள கர்மால் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். ஆனால் அது ஹைதராபாத்தை காட்டிலும் காதியானிற்கு மிக அருகில் இருக்கின்றது. சேட் சாஹிப் அவர்களது குடும்பம் ஒரு கலப்பற்ற குடும்பமாகும். அவர்களது வீட்டிலுள்ள பெண்களோடு எங்களுடைய வீட்டிலுள்ள பெண்களுக்கும், அவர்களுடைய மகளுக்கும் என்னுடைய மகளுக்கும், மேலும் அவர்களுடைய மகனுக்கும் எனக்கும் எப்படிப்பட்ட கலப்பற்ற தொடர்பு இருந்து என்றால் ஒரே வீட்டைப் போன்றே அது இருந்தது.

ஒருவர் மற்றவரது துக்கம், மகிழ்ச்சி ஆகியவற்றை தமது துக்கமாகவும், மகிழ்ச்சியாகவுமே உணர்ந்தோம். அன்னாரது மகளின் நிக்காஹ் கர்னால் மாவட்டத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய அப்துல் அஸீஸ் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய முஹம்மது யூனுஸ் சாஹிப் அவர்களோடு ஆயிரம் ரூபாய் மஹ்ர் தொகையை நிர்ணயித்து நடைபெற்றது.

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறினார்கள். சேட் சாஹிப் அவர்கள் பெண் சார்பாக என்னை வலியாக நியமித்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூது (குத்பாத்தே நிக்காஹ்) தொகுதி 3 பக்கம் 553)

அம்மத்துல் ஹய் சாஹிபா ஐவேளை தொழுகையை முறையாக பேணக்கூடியவர்களாகவும், கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாகவும், மிகவும் கலப்பற்ற தன்மையை வெளிப்படுத்தக் கூடியவர்களாகவும் விளங்கினார்கள். என்னையும் சந்திக்க வருவார்கள். முதுமை இருந்த போதிலும் என்னை சந்திப்பதற்காக இங்கு வருவார்கள். மேலும் கலப்பற்ற தன்மையை வெளிப்படுத்துவார்கள். மிகவும் நல்ல மற்றும் தூய்மையான பெண்மணி ஆவார்கள். வஸிய்யத்தும் செய்திருந்தார்கள்.

தமக்குப் பின்னால் இரண்டு மகள்களையும், இரண்டு மகன்களையும் மற்றும் பெரும் எண்ணிக்கையில் பேரக்குழந்தைகளையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னார் ஜெர்மனியைச் சார்ந்த முஹம்மது இத்ரீஸ் ஹைதராபாதி சாஹிப் அவர்களது தாய் ஆவார்கள். அவர்களது பேரக் குழந்தைகள் இங்கும் இருக்கின்றனர். முஸவ்விர் அஹ்மது சாஹிப் அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் தொண்டாற்றுகின்றார்கள்.

அல்லாஹ் அவர்களது தகுதியை உயர்த்துவானாக. மேலும் அவர்களது சந்ததிகளுக்கும் கிலாஃபத்தோடு உண்மையான தொடர்பை நிலைத்திருக்கச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.

**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**எனக்கு எந்தவொரு சமுதாயத்திடமும் எந்தவொரு பகைமையும் இல்லை. எனினும், என்னால் இயன்ற வரை அவர்களது கொள்கைகளில் சீர்திருத்தத்தை நான் விரும்புகின்றேன். எவராவது நம்மை ஏசிப் பேசினால் நமது முறையீடு இறைவன் முன்னிலையில் மட்டுமே இருக்கும்... எந்நிலையிலும் மனித இனத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது எமது உரிமையாகும்.**

**(சிராஜே முனீர், ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 28)**

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 2 August 2018 Issue No. 31

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

திருக்குர்ஆன் அருளப்படாதிருந்தால் முழு உலகமும் அசுத்தமான இழிந்த பொருளாக ஆகியிருக்கும். திருக்குர்ஆன் எவ்வாறான சிறந்த நூல் என்றால் அதன் முன் ஏனைய எல்லா வழிகாட்டல்களும் பொருளற்றவையாகும்.

பைபிளின் புதிய ஏற்பாட்டை புறாவின் உருவத்தில் வெளியான பரிசுத்த ஆவியே கொண்டு வந்தது. புறா ஒரு பலவீனமான பறவையாகும். அதை ஒரு பூனையும் பிடித்து விட முடியும். இதன் காரணமாக கிறிஸ்தவர்கள் நாளுக்கு நாள் பலவீனம் என்னும் படுகுழியில் விழுந்து கொண்டே போகின்றனர். மேலும் அவர்களிடம் ஆன்மீகம் எஞ்சியிருக்கவில்லை. ஏனெனில் அவர்களின் எல்லா விசுவாசங்களின் அடிப்படையும் புறாவின் மீதே இருந்தது. இதற்கு மாறாக, திருக்குர்ஆனின் பரிசுத்த ஆவியானது மகத்துவமான உருவில் வெளியானது. அது தன்னைக் கொண்டு பூமியிலிருந்து வானங்கள் வரை முழு பூமியையும் வானங்களையும் நிரப்பி விட்டது.

ஆகவே அப்புறாவின் நிலை எங்கே? திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் மகத்துவமான அந்தத் தோற்றம் எங்கே? ஒரு மனிதன் திருக்குர்ஆனின் வெளிப்படையான சொற்களையும் அவற்றின் பொருள்களையும் விட்டுவிடாமல், மறுக்காமல் அவற்றிற்கேற்ப செயல்பட்டு வந்தால் அவனை அந்த திருக்குர்ஆன் ஒரே வாரத்தில் தூய்மையானவனாக்கி விடும். நீங்கள் திருக்குர்ஆனை விட்டும் விலகி ஓடாமலிருந்தால் அது உங்களை இறைத் தூதர்களைப் போன்று ஆக்க முடியும். திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த நூலாவது அதனைப் படிப்பவர்களுக்கு ஆரம்பத்திலேயே இவ்வாறான துஆவை கற்றுக் கொடுத்திருக்கின்றதா? மேலும் இந்த நம்பிக்கையை வேறெந்த வேதமாவது உங்களுக்கு அளித்துள்ளதா?

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ○صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ

அதாவது இறைவா! எங்களுக்கு முன்னுள்ள நபி, ரஸூல், சித்தீக், ஷஹீது, சாலிஹ் போன்றோர்களுக்கு காண்பித்துக் கொடுத்த உனது அருட்கொடையின் வழிகளை எங்களுக்கும் காண்பித்துக் கொடுத்தருள்வாயாக.

ஆகவே நீங்கள் உங்களின் தைரியத்தையும் உறுதியையும் கைவிட்டு விடாமல் முன்னேறுங்கள். திருக்குர்ஆனின் அழைப்பை நீங்கள் ஒருபோதும் ஏற்க மறுக்காதீர்கள். அது உங்களின் முன்னோர்களுக்கு அருளப்பட்ட அருட்கொடையை உங்களுக்கு அளிக்க விரும்புகின்றது. இஸ்ரவேலரின் நாட்டையும் அதன் புனித நகரமாகிய பைத்துல் முகத்தஸையும் அவன் (இறைவன்) உங்களுக்கு அளிக்கவில்லையா? இன்று வரை உங்களின் பிடியிலேயே இருந்து வருகின்றனவே?

நம்பிக்கையில் உறுதி இழந்தவர்களே! கோழைகளே! உங்களுடைய இறைவன் இஸ்ரவேலருக்குரிய பௌதீக சம்பந்தமான சொத்துக்கள் முழுமைக்கும் உங்களைப் பிரதிநிதியாக ஆக்கியிருக்கின்றான். ஆயினும் அவனால் ஆன்மீக ரீதியில் அவர்களுக்கு உங்களைப் பிரதிநிதியாக ஆக்க முடியவில்லை என்பது உங்களது எண்ணமா?

மாறாக, இறைவன் உங்களுக்கு அவர்களை விட அதிகமான அருட்கொடைகளை அளிக்க நாடுகிறான். இறைவன் அவர்களது ஆன்மீக பௌதீக சம்பந்தமான இருவகைச் செல்வங்களுக்கும் வாரிசாக உங்களை ஆக்கி இருக்கின்றான். ஆனால் இறுதி நாள் வரை உங்களுக்கு வாரிசாக வேறு எவராலும் வர இயலாது.

இறைவனது வஹீ, இல்ஹாம் (வெளிப்பாடு) இறைவனோடு உரையாடுதல் போன்ற அருட்கொடைகளிலிருந்தும் இறைவன் உங்களை ஒருபோதும் விலக்கி வைக்க மாட்டான். மாறாக, உங்கள் முன்னோர்களுக்கு அருளப்பட்ட எல்லா அருட்கொடைகளையும் உங்களுக்கு அவன் முழுமைப்படுத்துவான்.

ஆனால் எவர் இறைவனது வெளிப்பாடு தன்மீது இறங்காதிருக்கையில் அவ்வாறு இறங்கியதாக அவ்விறைவன் மீது அவமரியாதையாக பொய் பேசுவாரோ அல்லது தான் இறைவனோடு உரையாடாமலிக்கையில் அவனோடு உரையாடக் கூடிய பாக்கியம் தனக்குக் கிடைத்ததாக இட்டுக்கட்டி கூறுவாரோ அவர் நிச்சமயாக அழிக்கப்படுவார் என்பதை அவ்விறைவனையும் அவனது வானவர்களையும் சாட்சியாக வைத்துக் கூறுகின்றேன். ஏனெனில் அவன் தன்னைப் படைத்த இறைவன் மீது பொய்யாக இட்டுக்கட்டி கூறியுள்ளான். அவனை வஞ்சித்துள்ளான்.மேலும் கொடிய எல்லை மீறலையும் இறுமாப்பையும் மேற்கொண்டுள்ளான்.

ஆகவே, இந்த நிலைக்கு நீங்கள் அஞ்சுங்கள். பொய்யான வெற்றுக் கனவுகளை உண்டுபண்ணக் கூடியவர்கள் மீதும் இறைவனோடு உரையாடுவதாகப் பொய்யான வாதம் செய்பவர்கள் மீதும் இறைவனது சாபம் உண்டாகும். இது எவ்வாறென்றால் இறைவனே இல்லை என்று அவர்கள் தங்களது உள்ளத்தில் நினைப்பது போன்றதாகும். ஆனால் அவர்கள் இறைவனது கடும் தண்டனைக்கு ஆளாவார்கள். மேலும் அவர்களது தீய நாட்கள் அவர்களை விட்டும் அகன்று போகாது.

ஆகவே நீங்கள் உண்மையிலும் நேர்மையிலும் தக்வா என்னும் இறையச்சத்திலும் நிலை நின்று இறைவனை நேசிப்பதில் முன்னேறுங்கள். உங்களது உயிர் இருக்கும்வரை இதனையே உங்களது பணியாக கருதுங்கள். இதன்பின் உங்களில் யாரை இறைவன் விரும்புவானோ அவரை தன் உரையாடலின் அருளுக்கும் ஆளாக்குவான். இதன் மீது உங்களுக்கும் எவ்வித விருப்பமும் இருக்கக்கூடாது. ஏனெனில் மன இச்சையின் காரணத்தால் ஷய்த்தானின் தொடர்பானது உங்களுக்கு வரத் தொடங்கி விடக்கூடும். இதனால் பலர் அழிந்து விடுகிறார்கள்.

ஆகவே நீங்கள் இறைத் தொண்டு செய்வதிலும் இறைவனை வணங்குவதிலும் மிக்க ஈடுபாடு கொண்டிருங்கள். நீங்கள் இறைவனது எல்லா கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதிலும், உறுதி நம்பிக்கையில் முன்னேற்றத்தை விரும்ப வேண்டும் என்பதிலும் உங்களின் முழு முயற்சியும் இருக்க வேண்டும். இரட்சிப்பிற்காகவோ இறைவெளிப்பாட்டைக் காட்டுவதற்காகவோ முயற்சி மேற்கொள்ளக் கூடாது.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 26–28)

அடிக்குறிப்பு:– நேர்வழிக்கான இரண்டாவது வழி சுன்னத் ஆகும். திருநபி (ஸல்) அவர்கள் நடந்து காட்டிய தூய்மையான முன்மாதிரிகளாகும். உதாரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையை இவ்வாறு தொழ வேண்டும் என்பதனை செய்து காட்டினார்கள். நோன்பு நோற்பதை காட்டித் தந்தார்கள். இதுவே சுன்னத் ஆகும். இறைவனது சொல்லை செயல் மூலம் வெளிப்படுத்தினார்கள். இதன் பெயரே சுன்னத். நேர்வழி கிடைக்க மூன்றாவது வழி ஹதீஸ் ஆகும். இவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் அவர்களின் கூற்றுக்கள் ஒன்று சேர்க்கப்பட்டவையாகும். ஹதீஸ்கள், குர்ஆன் சுன்னத்துக்குப் பின் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது. ஏனெனில் பல ஹதீஸ்கள் யூகத்தினாலானவையாயிருக்கின்றன. இருப்பினும் அதோடு சுன்னத்தும் சேர்ந்து விட்டால் அது அந்த ஹதீஸை உறுதி செய்யும்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad